இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 12-10-2024

# அரியானாவில் அரைகுறை வெற்றியே

அரியானாவில் பா.ஜ.க. மூன்றாவது முறையாக வெற்றி பெற்றிருப்பதை வைத்து 'ஹாட்ரிக்' வெற்றி என்று அவர்கள் மகிழ்ச்சியடையும் அளவுக்கு அதில் எந்த வெற்றியும் கிட்டி விடவில்லை. அரைகுறை வெற்றியைத்தான் பா.ஜ.க. பெற்றுள்ளது.

90 உறுப்பினர்களைக் கொண்ட அரியானா மாநிலத்தில் பா.ஜ.க. 48 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளது. காங்கிரஸ் 37 தொகுதிகளைக் கைப்பற்றி உள்ளது. எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் காங்கிரசை விட, ஆளும் கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் பா.ஜ.க. 11 இடங்களை மட்டுமே கூடுதலாகக் கைப்பற்றி உள்ளது. இதனை மகத்தான வெற்றியாகவோ, மாபெரும் வெற்றியாகவோ சொல்ல முடியாது.

கூடுதல் வாக்குகளையாவது பா.ஜ.க. பெற்றுள்ளதா என்று பார்த்தால் அதுவும் மிகமிக சொற்பமான வேறுபாடு தான். இந்தத் தேர்தலில் வாக்கு சதவீதத்தைப் பொறுத்தவரை பா.ஜ.க.வும் காங்கிரஸ் கட்சியும் சம அளவு வாக்குகளைப் பெற்றுள்ளன என்றே சொல்லலாம். பா.ஜ.க. 39.94 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி 39.09 விழுக்காடு வாக்குகளைப் பெற்றுள்ளது. இரு கட்சிகளுக்கும் இடையேயான வாக்கு வித்தியாசம் வெறும் 0.85 விழுக்காடு தான். ஒரு விழுக்காடுக்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி வாய்ப்பை காங்கிரஸ் இழந்துள்ளது. எனவே இதனையும் மகத்தானது என்று சொல்ல முடியாது.

வெற்றி பெற்ற பா.ஜ.க. உறுப்பினர்களாவது பல்லாயிரம், பல லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளார்களா என்றால் அதுவும் இல்லை.

★ உச்சகாலன் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் 32 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார்.

★ தாத்ரி தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் 1957 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார்.

★ மகேந்திரகர் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் 2648 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார்.

★ ஹோடல் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் 2595 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார்.

★ புந்திரி தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் 2197 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார்.

★ அசாந்த் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் 2306 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார்.

★ அடேலி தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் 3085 வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றுள்ளார்.

இதுதான் பா.ஜ.க.வின் ஹாட்ரிக் வெற்றியா?

**இவையும் ஒழுங்காக எண்ணப்பட்ட கணக்கா என்றால், அதுவும் சந்தேகத்துக்குரியதே. காலை 8 மணிக்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது முதல் காலை 10 மணி வரை காங்கிரஸ் கட்சி 70க்கும் மேற்பட்ட தொகுதிகளில் முன்னிலை பெற்றிருந்தது. பா.ஜ.க. 10க்கும் குறைவான தொகுதிகளில் மட்டுமே முன்னிலையில் இருந்தது. இந்த நிலையில், காலை 10 மணிக்குப் பிறகு வாக்கு எண்ணிக்கை நிலவரம் திடீரென தலைகீழாக மாறியது. அதன்பிறகு வெற்றி நிலவரங்களை அறிவிப்பதில் மிகப்பெரிய மந்த நிலைமையை தேர்தல் ஆணையம் உருவாக்கியது. இதனை காங்கிரஸ் கட்சி பிரச்சினை ஆக்கியது.**

**திடீரென்று காங்கிரஸும், பா.ஜ.க.வும் சம அளவிலான தொகுதிகளில் முன்னிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. எத்தனை தொகுதி என்று சொல்லாமலேயே சம அளவில் என்றார்கள். வாக்கு எண்ணிக்கை முடிவுகளை தேர்தல் ஆணையத்தின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடவில்லை. இதற்குள் மதியம் ஆகிவிட்டது. மதிய நிலவரப்படி பா.ஜ.க. அதிக இடங்களில் முன்னிலை என்று அறிவிக்கப்பட்டது. இவையெல்லாம் தேர்தல் ஆணையத்துக்கே வெளிச்சம் ஆகும். மக்களுக்கு மர்மமான நிலவரங்கள்தான்.**

உச்சகாலன் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் பிரியேந்திர சிங் தொடக்கம் முதலே முன்னிலை வகித்த நிலையில், கடைசி நேரத்தில், பா.ஜ.க. வேட்பாளர் 32 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. பா.ஜ.க. முன்னிலை என்று வந்தாலே, அத்தோடு வாக்கு எண்ணிக்கையை நிறுத்தி விட்டு, வெற்றி பெற்றதாக முடித்து விடுவதாக குற்றச்சாட்டுகள் கிளம்பி உள்ளது.

அரியானாவில் சுமார் 14 தொகுதிகளில் வாக்குப்பதிவு இயந்திரத்தில் பிரச்சினை இருந்ததாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜெயராம் ரமேஷ் சொல்லி இருக்கிறார். இந்த 14 தொகுதிகள்தான் பா.ஜ.க.வுக்கு உதவியாக இருந்துள்ளன.

"அரியானாவில் பெற்ற வெற்றி என்பது சிறந்த நிர்வாகத்துக்கும், வளர்ச்சி சார்ந்த அரசியலுக்கும் கிடைத்த வெற்றியாகும்" என்று பிரதமர் நரேந்திர மோடி தனக்குத்தானே முதுகில் தட்டிக் கொண்டுள்ளார். இது உண்மையாக இருந்தால் 50 விழுக்காடு வாக்குகளை பா.ஜ.க. பெற்றிருக்க வேண்டும். காங்கிரஸுக்கும் பா.ஜ.க.வுக்கும் 5 விழுக்காட்டுக்கு மேல் வித்தியாசம் இருக்க வேண்டும். பா.ஜ.க. வேட்பாளர்கள் அனைவரும் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். இது எதுவுமில்லை. எனவே, இந்த வெற்றி சிறந்த நிர்வாகத்துக்கும் வளர்ச்சி சார்ந்த அரசியலுக்கும் கிடைத்த வெற்றியல்ல.

இதுவரை முதலமைச்சராக இருந்த மனோகர் லால் கட்டரை தூக்கி விட்டு புதிய முதலமைச்சரைப் போட்டது பா.ஜ.க. அந்தக் கட்சி மீதான அனைத்து வெறுப்புகளும் கட்டாருடன் சேர்ந்து போய்விட்டது. அதனால்தான் இந்தளவுக்கு வாக்குகளை பா.ஜ.க.வால் வாங்க முடிந்தது. ஒருவரைப் பலியிட்டு மீண்டும் ஆட்சியைத் தக்க வைத்துள்ளது பா.ஜ.க. என்று சொல்லலாமே தவிர, மோடி சொல்வதை பா.ஜ.க. நம்பினால் ஏமாந்து போவார்கள்.

## பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிவோருக்கு

# 20 விழுக்காடு மிகை ஊதியம் - கருணைத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக்.12-

**அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 'C' மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் - என தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

உற்பத்தித் துறை, வாகனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிப்பு, பொறியியல், மருந்துகள், ஆடைகள், தோல் பொருட்கள், தொழில்நுட்பம், சேவை போன்ற அனைத்து முக்கிய துறைகளிலும் தமிழ்நாடு முன்னணி மாநிலங்களுள் குறிப்பாக தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் தொழிற்சாலை ஊழியர்களின் எண்ணிக்கையிலும் முன்னிலை மாநிலமாக திகழ்கிறது. தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப, உலகத்தரம் வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் திறன்மிக்க தொழிலாளர்களின் அயராத உழைப்பு மற்றும் அரசின் தொலைநோக்கு கொண்ட திட்டங்கள் இணைந்து, தமிழகம் இந்தியாவின் முன்னணி உற்பத்தி மையமாக மாறி வருவதுடன் 2030 ஆம் ஆண்டுக்குள் "1 டிரில்லியன் அமெரிக்க டாலர்" பொருளாதாரத்தை (one trillion economy) நோக்கி பயணிக்கிறது. தொழிலாளர்களின் சக்தி தான் ஒரு நாட்டை உயர்த்தும் என்பதை கருத்தில் கொண்டும், உற்பத்தியைப் பெருக்குவதிலும் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும் அதிக பங்கு வகிக்கும் என்பதை கருத்தில் கொண்டும் பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் 2023-24 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

திருத்தப்பட்ட போனஸ் சட்டம் 2015 இன் படி, மிகை ஊதியம் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ.21,000 எனவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதன்படி மிகை ஊதியம் கணக்கிட இருந்த மாதாந்திர சம்பள உச்சவரம்பு ரூ.7,000 ஆகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி மாதாந்திர சம்பள உச்சவரம்பான ரூ.21,000 என்பதைத் தளர்த்தி அனைத்து 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களுக்கு 2023-24ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையினை கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

1. இலாபம் ஈட்டியுள்ள பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் 'C' மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கப்படக்கூடிய உபரி தொகையை கணக்கில் கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

2. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியும் தகுதி யுடைய 'C' மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத்தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

3. ஒதுக்கக்கூடிய உபரி தொகை இல்லாத பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 'C' மற்றும் 'D' பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத்தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகைஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகையும் வழங்கப்படும்.

5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதி யுடைய 'C' மற்றும் 'D' பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.

6. இது தவிர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ.3,000/ கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இதனால் மிகை ஊதியம் பெற தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் குறைந்த பட்சம் ரூ.8400/ம் அதிகபட்சம் ரூ.16800/ம் பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2 லட்சத்து 75 ஆயிரத்து 670 தொழிலாளர்களுக்கு 369 கோடியே 65 லட்சம் ரூபாய் மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படும். இது தவிர பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும்.

அரசின் இந்த நடவடிக்கை பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் மிகவும் ஊக்கத்துடன் பணியாற்றுவதுடன், எதிர்வரும் விழாக்காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாட வழிவகை செய்யும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# மக்கள் நலனில் முதல்வர் தலைமையிலான அரசு ஒளிவுமறைவற்ற அரசு!

## கிராம சபைக் கூட்டத்தில் அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, அக். 12-*

*சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி கல்லல் தாலுகா மேல பட்ட மங்கலத்தில் அண்ணல் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு சிறப்பு கிராம சபை கூட்டம் ஊராட்சி மன்ற தலைவர் சந்திரன் தலைமையில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் முன்னிலையில் நடைபெற்றது. திட்ட இயக்குனர் ராம.சிவராமன் வரவேற்றுப் பேசினார்.*

*கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரிய. கருப்பன் பேசியதாவது.*

*அண்ணல் காந்தியடிகள் நாடு முன்னேற வேண்டும் என்று விரும்பினார். அதிலும் குறிப்பாக கிராமங்கள் அதிக அளவில் முன்னேற்றம் பெறவேண்டும். அதன் மூலம் கிராமராஜ்யம் ஏற்பட வேண்டும் என்று பெரிதும் விரும்பினார். அண்ணல் காந்தி அதற்காக பாடுபட்டார். காந்தி பிறந்த நாளில் இன்று கிராம சபை கூட்டம் நடைபெறுவது மிகவும் பொருத்தமான ஒன்றாகும். இந்த கூட்டம் நடைபெறுவதால் கிராமத்தின் தேவைகள் தீர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். வருடத்தில் 6. முறை இத்தகைய கிராம சபை கூட்டம் நடைபெற்று வருகின்றது. இத்தகைய கூட்டம் நடைபெறுவ தால் நடைபெற்று. வரும் அரசின் திட்டப் பணிகள் மக்களுக்கு நேரடியாக போய் சேர்கிறதா என்பதை நேரடியாக கேட்டு தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமைகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் தலைவர் தளபதி ஆட்சியில் தமிழகம் பல்வேறு வகையில் முன்னேறியுள்ளது.. தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த போது கிராம மக்களின் அடிப்படை தேவைகளை உணர்ந்து அதை நிறைவேற்றினார்.*

*கிராமங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தினார். அவர் வழியில் முதல்வர் தளபதி அவர்கள் கிராமத்தில் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்ற அயராது பாடுபட்டு வருகிறார். தலைவர் கலைஞர் முதல்வராக இருந்த பொழுது ராமநாதபுரம் சிவகங்கை மாவட்ட. மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சுத்தமான குடிநீர் வழங்க திட்டமிட்டு ராமநாதபுரம் கூட்டுக்குடிநீர் திட்டத்தினை ரூபாய் 619 கோடியில் நிறைவேற்றினார். தற்போது அத்திட்டம் விரிவாக்கப்பட்டு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பணி 85சதவிகிதம் முடிவடைந்துள்ளது. இதன்மூலம் விடுபட்ட அனைத்து பகுதிகளுக்கும் சுகா தாரமான குடிநீர் வழங்கப்படும். அரசு திட்டங்கள் முறையாக நடைபெறுகிறதா என்பதை மக்கள் கண்காணிக்க வேண்டும். அது குறித்து அதிகாரிகள் மக்கள் பிரதிநிதிகளிடம் தெரிவிக்க வேண்டும். மக்கள் நலனில் மிகுந்த அக்கறை உள்ள அரசாக தளபதி தலைமையிலான திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. முதல்வர் தளபதி தலைமையிலான இந்த அரசு தலைவர் கலைஞர் வழியில் செயல்படும் அரசாக அமைந்துள்ளது. ஊராட்சிகளில் சிறிய அளவிலான திட்டங்களை நீங்களே நிறை வேற்றிக் கொள்ளலாம். அதற்கேற்ப இத்தகைய கூட்டங்களை மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்.*



*இவ்வாறு அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் பேசினார்.*

*இந்த கூட்டத்தில் கல்லல் ஒன்றியக்குழு தலைவர் திருமதி சொர்ணம் அசோகன், மாவட்ட வருவாய் அலுவலர் முனைவர் திருமதி செல்வநாயகி கூட்டுறவு இணைப் பதிவாளர் ராஜேந்திர பிரசாத், ஒன்றியக்குழு துணைத்தலை வர் நாராயணன் ஆணையாளர் மகாலிங்கம் மாவட்ட கவுன்சிலர் மஞ்சரிலட்சும ணன், பொதுக். குழு உறுப்பினர் கரு.அசோகன், கல்லல் மேற்கு ஒன்றிய செயலாளர் குன்னக்குடி சுப்பிர மணியன், முன்னாள் ஒன்றிய குழு தலைவர் பெருமாள் தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் காளிமுத்து, புதூர் கண்ணன், பிள்ளையார்பட்டி சதிஸ்,, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்குமார் அயலக அணி சன்சீமான்சுப்பையா, வர்த்தக அணி ருக்மாசரவணன், ஒன்றிய மாணவரணி சேர்மன், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் உட்பட சுற்றுப்புற கிராம மக்கள்அதிகாரிகள் கலந்து கொண்டார்கள். மாவட்ட ஊராட்சி உதவி இயக்குனர் கேசவதாசன் நன்றி கூறினார்.*

# 2025-ஆம் ஆண்டிற்கான குரூப் 4 தேர்வு ஜூலை 13-ஆம் தேதி நடைபெறும்!

## டி.என்.பி.எஸ்.சி. அறிவிப்பு!

*சென்னை, அக். 12 -*

*குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பு அடுத்த ஆண்டு ஏப்ரல் 25ம் தேதி வெளியாகிறது. 2025ம் ஆண்டிற்கான தேர்வு திட்டத்தை டிஎன்பிஎஸ்சி தற்போது வெளியிட்டுள்ளது.*

*டி.என்.பி.எஸ்.சி., அரசுப் பணியாளர் தேர்வாணையம் சார்பில் குரூப் தேர்வுகள் நடத்தப்பட்டு, அதன் மூலம் காலியாக உள்ள அரசுத் துறைகளின் பொறுப்புகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படுவது வழக்கம். இந்த நிலையில், அடுத்தாண்டுக்கான தேர்வுத்திட்டம் (பிளானர்), இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.*

*அதன்படி, குரூப் 1 தேர்வுக்கான அறிவிப்பு அடுத்தாண்டு ஏப்ரல் 1ம் தேதி வெளியிடப்பட்டு, ஜூன் 15ம் தேதி தேர்வு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*குரூப் 4 தேர்வுக்கான அறிவிப்பு ஏப்., 25ம் தேதி வெளியிடப்பட்டு, ஜூலை 13ம் தேதி நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் 2025 ஆம் ஆண்டுக்கான தேர்வு திட்டத்தை டிஎன்பிஎஸ்சி http://tnpsc.gov.in என்ற இணையதளத்தில் வெளியிட்டுள்ள நிலையில் இந்த இணையதளத்தில் அனைத்து விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

## மாணிக்கம் ஏற்பாட்டில்

# எஸ்.ஒகையூரில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## வசந்தம் கார்த்திகேயன் முன்னிலையில்!

*கள்ளக்குறிச்சி, அக்.12 -*

*முதலமைச்சர், சமூக நீதி காவலர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல், நல்லாட்சியை ஏற்று, கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் முன்னிலையில், தியாக துருகம் ஒன்றிய குழு உறுப்பினர் மாணிக்கம் ஏற்பாட்டில் எஸ். ஒகையூர் ஊராட்சியை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாற்றுக் கட்சியினர், நமது தாய் கழகமான திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.நமது கழகத்தில் இணைந்த அனைவருக்கும் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ கழக வேஷ்டி அணிவித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து வரவேற்றார். அதனைத் தொடர்ந்து புதிதாக அமைக்கப்பட்ட கொடி கம்பத்தில் கழக இரு வண்ண கொடியேற்றி, தனது சொந்த நிதியிலிருந்து கட்டுமானத் தொழிலாளர்களுக்கு பல்வேறு வகையான கட்டுமான உபகரண பொருட்களை வழங்கினார். மேலும் இந்த நிகழ்வில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர், ஒன்றிய குழு பெருந்தலைவர், துணைத் தலைவர், மாவட்ட, ஒன்றிய கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*




மாநில சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் பௌத்த சமுதாயத்தை சார்ந்தவர்கள் 144 பேர் நேற்று முன்தினம் அதிகாலை 5.00 மணிக்கு நாக்பூரில் அமைந்துள்ள தம்மசக்கர பரிவர்த்தன தீக்ஷா பூமி வழிபாட்டுத் தலத்திற்கு முதல் முறையாக தமிழ்நாடு அரசு ஏற்பாட்டில் முதலமைச்சர் ஆணையுடன் புறப்பட்டனர். அவர்களை விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல் திருமாவளவன் எம்.பி., சிறுபான்மை ஆணையத்தின் சார்பில் ஆணையத்தின் துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், தமிழ்நாடு பௌத்தர்கள் சங்க பேரவையின் ஒருங்கிணைப்பாளர் கௌதம சன்னா., திருநாவுக்கரசு., மாநில சிறுபான்மை ஆணையத்தின் உறுப்பினர் வழக்கறிஞர் எஸ். வசந்த் ஆகியோர் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து பக்தர்களை அனுப்பி வைத்தனர்.